# ලංකාණ්ඩුවේ ගැසට් පත්‍රය

## අති විශෙෂ

# இலங்கை அரசாங்க வர்த்தமானப் பத்திரிகை

## அதி விசேஷமானது

අංක 12,825 — 1961 දෙසැම්බර් 15 වැනි සිකුරාදා — 15.12.1961

12,825 ம் இலக்கம் — 1961 ம் ஆண்டு டிசெம்பர் மாதம் 15 ந் திகதி வெள்ளிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


# பகுதி I: தொகுதி (I)—பொது

## விலைக் கட்டளைகள்

உணவு விலைக்கட்டளை இல. சி. 337 — உப உணவுப்பொருட்கள்.

### 1950 ம் ஆண்டின் 29 ம் இலக்க விலைக்கட்டுப்பாட்டுச் சட்டம்

#### கட்டளை

1950 ம் ஆண்டின் 29 ம் இலக்க விலைக்கட்டுப்பாட்டுச்சட்டத்தின் 4 ம் பிரிவினால் விலைக்கட்டுப்பாட்டதிகாரிக்கு (உணவு) அளிக்கப்பட்டுள்ள தத்துவங்களைக்கொண்டு விலைக்கட்டுப்பாட்டதிகாரி (உணவு) றெஜினோல்ட் லோறன்ஸ் ஆர்னோல்டா ஆகிய யான் இக்கட்டளையால் :—

(1) 1961 ம் ஆண்டு நவம்பர் மாதம் 10 ந் தேதியைக்கொண்ட 12,746 ம் இலக்க அதிவிசேட இலங்கை வர்த்தமானப் பத்திரிகையில் 1961 ம் ஆண்டு நவம்பர் மாதம் 10 ந் தேதி வெளியான அதிவிசேட இலங்கை வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமான சி. 335 ம் இலக்கக் கட்டளையை இத்திகதியிலிருந்து எடுத்துவிடுகிறேன்.

(2) இதனோடிருக்கும் அட்டவணையின் 2 ம் 3 ம் பத்திகளில் விபரிக்கப்பட்டிருக்கும் விலைகளையே முறையே மொத்த அந்தர் ஒன்றை மொத்த வியாபாரி ஒருவர் விற்கும் ஆகக்கூடிய மொத்தவிலையாகவும், நிகர இருத்தல் ஒன்றை சில்லறை வியாபாரி ஒருவர் பாவிப்பாளர் ஒருவருக்கு விற்கும் ஆகக்கூடிய சில்லறை விலையாகவும் குறித்த அட்டவணையின் நேரொத்த பதிவில் 1 ம் பத்தியில் விபரிக்கப்பட்ட பொருட்களை இந்த விலைக்குக் கூடுதலாக கொழும்பு மாநகரசபை எல்லைக்குள் விற்கலாகாதெனவும் உடனடியாக நடமுறையில் வருமாறும் விதிக்கிறேன்.

(3) இக்கட்டளையின் நோக்கத்துக்காக.—

(அ) குறித்த அட்டவணையின் 1 ம் பத்தியில் விபரிக்கப்பட்ட ஒரு பொருளில் எத்தொகையையாவது திருப்பி விற்பதற்காக விற்றல் அல்லது குறித்த அட்டவணையின் 1 ம் பத்தியில் விபரிக்கப்பட்ட ஒரு பொருளை ஒரு மொத்த அந்தரைக்கொண்ட தொகையில் அல்லது அதிற்கூடிய தொகையில் ஒரு தடவையில் விற்றல் மொத்த விற்பனையாகவே கருதப்படுமென்றும்,

(ஆ) குறித்த அட்டவணையின் 1 ம் பத்தியில் விபரிக்கப்பட்ட ஒரு பொருளில் ஒரு மொத்த அந்தருக்குக் குறைந்த எத்தொகையையாவது பாவிப்புக்காக அல்லது உபயோகத்துக்காக விற்றல் சில்லறை விற்பனையாகவே கருதப்படுமென்றும் ஆஞ்ஞையிடுகிறேன்.

(4) இக்கட்டளையால் ஆகக்கூடிய விலைகள் விதிக்கப்பட்டுள்ள ஒவ்வொரு இடப்பரப்பிலும் குறித்த அட்டவணையின் 1 ம் பத்தியில் விபரிக்கப்பட்ட எப்பொருளையேனும் வேறொரு பொருளோடு கலந்து விற்றலாகாது என ஆஞ்ஞையிடுகிறேன்.

(5) இக்கட்டளையால் ஆகக்கூடிய விலைகள் விதிக்கப்பட்டுள்ள ஒவ்வொரு இடப்பரப்பிலும் குறித்த அட்டவணையின் 1 ம் பத்தியில் விபரிக்கப்பட்ட எப்பொருளையேனும் தம்வசத்தில் அல்லது தமது கட்டுப்பாட்டில் எவ்விடத்திலாவது, வாகனத்திலாவது வைத்திருக்கும் ஒவ்வொரு வியாபாரியும் அவ்விடத்தில் அல்லது அவ்வாகனத்தில் தகுந்த ஒரு கொள்கலத்தில் குறிப்பிட்ட பொருளில் சிறுதொகையையும், இக்கட்டளையால் அப்பொருளுக்கு விதிக்கப்பட்ட ஆகக்கூடிய விலைகள் ஒரு அங்குல உயரத்துக்குக் குறையாத எண்களில், விலை அட்டைகளில் அல்லது பலகைகளில் எழுதி அப்பொருளையும் ஆகக்கூடிய விலையையும் வாங்குபவரால் நன்றாகப் பார்க்கக்கூடியவாறு அக்கொள்கலத்தில் இணைத்து பகிரங்கமாகப் பார்வைக்கு வைத்தல் வேண்டுமென ஆஞ்ஞையிடுகிறேன்.

(6) இக்கட்டளையின் நோக்கத்துக்காக "இருத்தல்" அல்லது "இரு" என்பது அவோர்டுபோஸ் எடுத்தலளவை முறையின் பிரமாண இருத்தல நிறையாகக் கருதப்படுமென்று ஆஞ்ஞையிடுகிறேன்.

(7) இக்கட்டளையால் ஆகக்கூடிய விதிக்கப்பட்டுள்ள ஒவ்வொரு இடப்பரப்பிலும் குறித்த அட்டவணையின் 1 ம் 2 ம் பத்தியில் விபரிக்கப்பட்ட பொருள் எதனையும் மொத்தமாக விற்கும் ஒவ்வொருவரும் குறித்த அட்டவணையின் 1 ம் பத்தியில் விபரிக்கப்பட்ட ஏதாவதொரு பொருளைச் சில்லறையாக விற்கும் ஒவ்வொருவரும் அப்பொருளை வாங்குவோர் கேட்குமிடத்து அன்னாருக்குப் பின்வருவனவற்றைக் குறிப்பிட்டு பற்றுச்சீட்டு ஒன்று கொடுத்தல் வேண்டுமென ஆஞ்ஞையிடுகிறேன்.

(அ) விற்பனை நடந்த திகதி
(ஆ) விற்றபொருளின் தொகை (நிறையில்)
(இ) விற்ற தொகைகளுக்குக் கொடுத்த விலை
(ஈ) எவ்விதமான விறபனை, அதாவது மொத்த விற்பனையா அல்லது சில்லறை விற்பனையா ?

(8) குறித்த அட்டவணையின் 1 ம் பத்தியில் விபரிக்கப்பட்ட ஏதாவதொரு பொருள் விற்சப்படுமிடத்து, அட்டவணையின் 2 ம் பத்தியில் குறிப்பிட்டுள்ள ஆகக்கூடிய விலைகளில் அவவாறு விற்கப்படும் பொருளைச் சுற்றிக்கொடுக்கும் உறை அல்லது வைத்துக்கொடுக்கும் கொள்கலம் ஏதாவது உபயோகப்படின் அதன் விலையும் அடங்கவேண்டுமென ஆஞ்ஞையிடுகிறேன்.

1961 ம் ஆண்டு டிசம்பர் மாதம் 15 ந் திகதியன்று கொழும்பில் முற்பகல் 11.45 மணிக்குக் கையொப்பமிடப்பட்டது.

ஆர். எல். ஆர்னோல்டா,
விலைக்கட்டுப்பாட்டதிகாரி.

அட்டவணை

| பத்தி 1<br>விபரம் | பத்தி 2<br>மொத்த மொத்த விற்கும் வியாபாரி அந்தர் ஆகக்கூடிய ஒருவர் ஒன்றை மொத்த விலை<br>ரூ. ச. | பத்தி 3<br>நிகர சில்லறை விற்கும் ருத்தல் வியாபாரி ஆகக்கூடிய ஒன்றை ஒருவர் சில்லறை விலை<br>ரூ. ச. |
|---|---|---|
| வெங்காயம் (சிக்பெலபூர், சிறுவெங்காயம் தவிர்ந்த ஏனைய எல்லா ரகமும்) | 22 50 | 0 25 |
| உருளைக்கிழங்கு | 24 0 | 0 26 |
| உருளைக்கிழங்கு (இந்தியன் மேட்டுப்பாளையம்) | 31 0 | 0 32 |
| செத்தல் மிளகாய் :— | | |
| சன்னம் முதலாம் ரகம் | 116 0 | 1 18 |
| சன்னம் 2 ம் ரகம் | 95 0 | 0 96 |
| முண்டு 1 ம் ரகம் | 104 0 | 1 4 |
| முண்டு 2 ம் ரகம் | 86 0 | 0 86 |
| சந்தகா | 126 0 | 1 30 |
| ஜாவா | 115 0 | 1 15 |
| நற்சீரகம் | 78 0 | 0 80 |
| மஞ்சள் | 64 85 | 0 66 |
| கொத்தமல்லி | 65 0 | 0 65 |
| முழு உழுந்து | 44 75 | 0 45 |
| பாசிப்பயறு | 43 75 | 0 44 |
| துவரம்பருப்பு | 30 0 | 0 30 |
| கடலைப்பருப்பு | 56 0 | 0 57 |
| சிந்தாமணிக்கடலை | 46 0 | 0 46 |
| உள்ளி (பம்பாய்) | 55 50 | 0 64 |
| புளி | 43 0 | 0 50 |

**குறிப்பு** :—இவ்விலைகள் மேலே சொல்லப்பட்ட பொருட்களை விற்கவேண்டுமென விதிக்கப்பட்ட விலைகளல்ல ; இவை **ஆகக்கூடிய** விலைகளாகும். இவ்விலைகளுக்கு மேலாக அப்பொருட்களை விற்றலாகாது.

12–1069.

இலங்கை, வாழைச்சேனை ஈஸ்ரேண் பேப்பர் மில்ஸ் கோப்பரேஷனால் உற்பத்திசெய்யப்பட்ட காகிதத்தில்
இலங்கை அரசாங்க அச்சகத்திற் பதிப்பிக்கப்பெற்றது